## (ஆ) உள்நாட்டு வேளாண்மை

### 1 வேளாண்மை உற்பத்தி.

#### (i) முக்கியமான கொள்கை மாற்றங்கள்.

உணவில் தன்னிறைவைப் பெறுவதற்கும், உள்நாட்டு வேளாண்மை அபி விருத்தியை ஊக்குவிப்பதற்கும் பல புதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

1973ஆம் ஆண்டு எண் 9 தாங்கிய நெல் உற்பத்தியாளர் சேமிப்புச் சட்டத்தின்படி, நெல் சந்தைப்படுத்தும் சபையானது பயிரிடுவோரால் விற்கப் பட்ட நெல்லிற்குக் கொடுக்கவேண்டிய பணத்தில் ஒரு பகுதியைக் கழிவு செய்து, கழிவுசெய்த அத்தொகையை உற்பத்தியாளர்கள் ஒவ்வொருவரினதும் சேமிப்புக் கணக்கில் வரவுவைப்பதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது உற் பத்தியாளர்கள் 60 வயதினை அடையும்பொழுதும் (பெண்களைப் பொறுத்த வரையில் 55 வயது) அல்லது தொழில்மாற்றம் காரணமாக உற்பத்தியாள ராக இல்லாதவிடத்தும், வேலை செய்யமுடியாத அளவு உடல்நிலை பாதிக்கப் பட்டவிடத்தும் அல்லது இலங்கையிலிருந்து வெளியேகல் போன்ற காரணங் களுக்காகவும் உற்பத்தியாளருக்கு இத்தொகை திருப்பி வழங்கப்படும்.

1973ஆம் ஆண்டு எண் 27 தாங்கிய வேளாண்மைக் காப்புறுதிச் சட்ட மானது, குறிக்கப்பட்ட பயிர்களுக்கும், கால்நடைகளுக்கும் முழுமையான வேளாண்மைக்காப்புறுதித்திட்டத்தினைச் செயற்படுத்துவதற்காக வேளாண்மைக் காப்புறுதிச்சபையினை ஏற்படுத்த முனைந்துள்ளது. இதன்வாயிலாக விவசாயி கள் தாம் உற்ற நட்டங்களுக்கு நட்டப்பணமும் விவசாய வருமானங்களைத் திடப்படுத்துகின்ற வாய்ப்பினையும், வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கு கின்ற வாய்ப்பினையும் பெறுகின்றனர். எனினும் இடைநிலைவழிமுறையாக இச்சட்டமானது, பணமாக அல்லது பொருளாகத் தவணைப்பணம் செலுத்து வதற்கும் வழி அமைத்துள்ளது. உத்தரவாத விலைத்திட்டத்தின்கீழ் பயிர்களின் விற்பனவு வாயிலாகப்பெறுகின்ற வருவாயினையும் தவணைப்பணம் செலுத் துவதற்குப் பயன்படுத்தலாம்.

1958ஆம் ஆண்டு எண் 1 தாங்கிய நெற்காணிகள் சட்டத்திற்குப் பதி லாக, 1973ஆம் ஆண்டு எண் 42 தாங்கிய வேளாண்மைக் காணிகள் சட்டம் கொண்டுவரப்பட்டது. இச்சட்டம், குத்தகை நிலங்களில் குத்தகைக்குப் பயி ரிடுவோர்களைப் பாதுகாத்தல், குத்தகையாளர்களால் நிலஉடைமையாளருக்குச் செலுத்தவேண்டிய வாடகைத் தொகையைக் குறித்தல், பயிர்ச்செய்கைக் குழுக்களை அமைத்தல், வேளாண்மை நிலங்களுக்குச் செலுத்தவேண்டிய குத்த கைத்தொகை மற்றும் ஏனைய விடயங்கள் பற்றிய தகராறுகளை வேளாண்மை நீதிமன்றங்கள் எவ்விதம் தீர்க்கவேண்டும் என்ற விடயங்கள் அனைத்தையும் இச்சட்டம்உள்ளடக்கியுள்ளது. வேளாண்மை விளைதிறன் சட்டத்தின்கீழ் (அடுத்த பக்கத்தைப் பார்க்கவும்) அமைக்கப்பட்ட விளைதிறன் குழுக்களின் முகவர்களாக பயிர்ச்செய்கைக் குழுக்கள் எல்லா வேளாண்மைக் காணிகளிலும் பணியாற்றும்.

1973ஆம் ஆண்டு எண் 43 தாங்கிய அரசாங்கக் காணிகள் விற்பனவுச் சட்டமானது, (சிறப்பு ஏற்பாடுகள்) வேளாண்மை அபிவிருத்திக்காக, சில குறிப்பிட்ட வகுப்புகளைச் சேர்ந்த ஆட்களுக்கு, அரசாங்கக் காணிகளை ஒரு ஒழுங்கான முறையில் விற்பதற்கும், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தில் உள்ள சில ஏற்பாடுகளை நீக்குவதற்கும் இடம்தருகின்றது.

மேற்குறிப்பிட்ட சட்டங்கள் யாவும் 1973ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டன. வேளாண்மை அபிவிருத்தியையொட்டி, 1972இல் நிறைவேற்றப்பட்ட முக்கிய சட்டங்களுள், 1972ஆம் ஆண்டு எண் 1 தாங்கிய நிலச்சீர்திருத்தச்சட்டமும், 1972ஆம் ஆண்டு எண் 2 தாங்கிய வேளாண்மை விளைதிறன் சட்டமும், குறிப்பிடத் தக்கவையாகும். நிலச்சீர்திருத்தச் சட்டமானது, நிலச் சீர்திருத்த ஆணைக்குழுவை ஏற்படுத்தியதுடன், சில கமம் செய்தற்குரிய காணிகளை நிலச் சீர்திருத்த ஆணைக்குழுவிடம் ஒப்படைப்பதற்கும் வழிசெய்தது. விளைதிறன், வேலைவாய்ப்பு என்பனவற்றை அதிகரிக்கக்கூடிய முறையில் நிலங்களை வழங்குவது இவ்வாணைக்குழுவின் கடமையாகும்.

ஆரம்ப மதிப்பீட்டின்படி, இந்நிலச்சீர்திருத்தச் சட்டத்தின்கீழ் 450,000 ஏக்கர்கள் கொண்டுவரப்படலாம். 1971ஆம் ஆண்டு இறுதிக்காலத்தில், 295,000 ஏக்கர்கள் (65.6 சதவீதம்) இவ்வாணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டது. இவ்வாணைக்குழுவினல், பல்வகைப்பட்ட நியதிச் சட்டநிறுவனங்களுக்கும், அமைப்புகளுக்கும் வழங்கப்பட்ட நிலங்கள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு:—

| | ஏக்கர்கள் |
|---|---|
| அரசாங்கப் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக் கூட்டுத்தாபனம் (முக்கியமாகத் தேயிலை, றப்பர்) ... | 5,914 |
| உடரட்ட கூட்டுறவு அபிவிருத்திச் சபை (முக்கியமாகத் தேயிலை) ... | 5,487 |
| தெங்குப் பயிர்ச்செய்கைச் சபை (முக்கியமாகத் தெங்கு) ... | 287 |
| அரசாங்கத் திணைக்களங்கள் ... | 224 |
| தனியார் அமைப்புகள் ... | 100 |
| மாவட்ட நிலச்சீர்திருத்த அதிகாரிகளின்கீழ் ... | 1,007 |
| நிலச்சீர்திருத்த ஆணைக்குழுக் கூட்டுறவுகள் ... | 4,173 |
| பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ... | 2,135 |
| | 19,327 |

மேலுள்ள அட்டவணைப்படி, நிலச்சீர்திருத்த ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்ட நிலங்களில் 6.6 சதவீதமான நிலங்கள் பல்வேறு நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. அத்துடன் 1973இல் கிட்டத்தட்ட 1,680 ஏக்கர்கள் கொண்ட நிலம் விற்பனவுக்காக விதந்துரைக்கப்பட்டுள்ளது.

1972ஆம் ஆண்டு எண் 2 தாங்கிய வேளாண்மை விளைதிறன் சட்டம் முகாமைத் திறமையினலும் நிலத்தை நன்முறையில் பயன்படுத்துவதினலும்

வேளாண்மை நிலங்களில், உச்சவிளைதிறனைப் பெறுவதற்கு முயன்றுள்ளது. மேலும் இச்சட்டமானது, வேளாண்மைப் பயிர்கள், கால்நடைகள் ஆகிய வற்றைச் சிறப்பான முறையில் நிருவகிப்பதற்கும் விளைதிறன் குழுக்கள், வேளாண்மை நீதிமன்றங்கள் ஆகியன அமைப்பதற்கும் வழிசெய்துள்ளது. மேலும் இச்சட்டமானது, உச்சப்பயனை அளிக்கக்கூடிய முறையில் நிலத்தைப் பயன்படுத்தும்படி நிலச்சொந்தக்காரர்கள் மீதும், பயிர்செய்நிலத்தில் வதி வோர்மீதும் கடப்பாடுகளை விதித்துள்ளது. இவ்வுச்சப் பயனைப்பெறும் நோக் குடன், வேளாண்மைக் காணி அமைச்சர் தன்னுடைய விருப்பின்பேரில் குறிக்கப்பட்ட சில பயிர்களைப் பயிரிடும்படியும் தெரிந்தெடுத்த கால்நடைகளை வளர்க்கும்படியும், பயிர்ச்செய்கை முறைகள், எவ்விதம் அமைய வேண்டும் என்பதுபற்றியும் நெறிப்படுத்தும் உரிமையை அமைச்சருக்கு வழங்குகிறது. இவற்றுடன நீர்நிருவாகம், மண்ணரிப்பினைத் தடைசெய்தல் பற்றிய சட்டங் களையும் எடுத்துக்கூறுவதற்கு இவருக்கு உரிமையுண்டு. விளைதிறன் சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட வேளாண்மை விளைதிறன் குழுக்கள் அமைச்சரினால் நியமிக்கப்படும். இக்குழுக்கள் வேளாண்மையில் ஈடுபட்டுள்ளவர்களின் நலன் களையும் பேணக்கூடிய பத்துப்பேர்களுக்கு மேற்படாத ஆட்களைக் கொண்டி ருக்கும், அல்லது அமைச்சர் தான் முக்கியமானவர்கள் எனக் கருதுகின்ற வேறு சிலரையும் இக்குழு உள்ளடக்கும். இவர்கள் வேளாண்மையை விருத்தி செய்வதோடு,ஒருங்கிணைக்கும் பணியிலும் ஈடுபடுவர். விளைதிறன் குழுக்கள் தமது கடமைகளைப் பயன்தரக்கூடிய முறையில் ஆற்றுவதற்கு, சொத்துக்களை தமதாக்கவும், விற்பதற்கும், வேளாண்மைக் கொள்கைகளை உருவாக்குவதற் காகத் தகவல்களைப் பெறுவதற்கும், அதனை வழங்குவதற்கும், திட்டங்களை எடுத்துக்கூறவும் வருடத்திற்கு 1 ஏக்கருக்கு ரூ. 6/- வரை அறவிடுவதற்கும், கடன்களைப் பெற விண்ணப்பிப்போரின் தகைமையை இலங்கை வங்கி நிர்ண யிக்க உதவிபுரிவதற்கும், மற்றும் இன்னோரன்ன பிறவற்றிற்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வேளாண்மை விளைதிறன் குழுவும், வேளாண்மைச் சேவை நிலை யத்தின் உதவிகளைத் தமக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். நிறுவப்படவேண் டிய 438 வேளாண்மைச் சேவை நிலையங்களில் (ஒவ்வொரு கிராமச் சபை எல்லைப்பரப்பிலும் ஒரு நிலையம் பணிபுரிதல் வேண்டும்) 1973இல் 83 நிலை யங்கள் நிறுவப்பட்டன. அத்தகைய ஒவ்வொரு சேவை நிலையமும் இலங்கை வங்கித் துணை அலுவலகம். வேளாண்மை விரிவாக்க அலுவலகம், விற்பனை நிலையம், வேளாண்மைத் தொடர்பான நீதிமன்றம் என்பவற்றைக் கொண் டிருக்கும். இந்நிலையங்கள், விளைதிறன் குழுக்களின் பணிப்பின்படி ஒருமுகப் படுத்தப்பட்ட சந்தை வசதிகள், பயிர்க்காப்புறுதி, ஏனைய சேவைகள் போன் றவற்றை வழங்கும்.

1975ஆம் ஆண்டு எண் 1 தாங்கிய, அவசரகால ஒழுங்குவிதிகளாக (உணவுப்பயிர்களின் பயிர்ச்செய்கை)க் காட்டப்பட்ட பொதுமக்கள் பாதுகாப் புச் சட்டத்தின்கீழ் அவசரகால ஒழுங்குவிதிகள் வெளியிடப்பட்டன. இச்சட் டங்களின்கீழ் மேற்கொள்ளப்பட்ட உணவு உற்பத்தித் திட்டத்தின் அடிப் படை நோக்கம் ''எல்லாப் பயிரிடக்கூடிய நிலங்களையும்'' குறிப்பிட்ட

## மாவட்ட அடிப்படையில் செயலாற்றல்

| மாவட்டம் | வலயம்** | விதைக்கப்பட்ட அளவு (ஏக்கர்கள்) | | அறுவடை செய்யப்பட்ட தேறிய அளவு (ஏக்கர்கள்) | | உற்பத்தி ('000 புசல்கள்) | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பெரும் போகம் 1972/73 | சிறு போகம் 1973 | பெரும் போகம் 1972/73 | சிறு போகம் 1973 | பெரும் போகம் 1972/73 | சிறு போகம் 1973 |
| கொழும்பு ... | ஈ. | 58,454 | 45,512 | 48,144 | 37,867 | 1,711 | 1,425 |
| களுத்துறை ... | ஈ. | 43,108 | 42,078 | 34,320 | 34,098 | 1,016 | 1,012 |
| காலி ... | ஈ. | 47,055 | 49,132 | 38,305 | 40,474 | 913 | 1,071 |
| மாத்தறை ... | ஈ. | 46,035 | 46,355 | 32,160 | 37,596 | 991 | 1,343 |
| புத்தளம் ... | வ. | 25,127 | 8,504 | 19,151 | 6,248 | 683 | 215 |
| குருநாகல் ... | வ. | 145,335 | 96,559 | 109,419 | 67,669 | 4,475 | 2,789 |
| கேகாலை ... | ஈ. | 27,503 | 23,241 | 22,443 | 17,728 | 944 | 858 |
| இரத்தினபுரம் ... | ஈ. | 40,338 | 36,264 | 33,533 | 30,466 | 1,364 | 1,241 |
| கண்டி ... | ஈ. | 48,615 | 40,301 | 40,955 | 33,630 | 2,724 | 1,786 |
| மாத்தளை ... | வ. | 24,219 | 13,398 | 18,635 | 10,338 | 936 | 438 |
| நுவரெலியா ... | ஈ. | 18,037 | 11,058 | 15,197 | 9,360 | 949 | 641 |
| பதுளை ... | ஈ. | 31,547 | 10,683 | 26,360 | 8,739 | 1,610 | 507 |
| மொனருகலை ... | வ. | 17,856 | 3,859 | 14,262 | 3,227 | 872 | 169 |
| யாழ்ப்பாணம் ... | வ. | 82,779 | 9,007 | 58,552 | 7,556 | 2,115 | 315 |
| வவுனியா ... | வ. | 45,383 | 1,473 | 37,122 | 1,209 | 1,568 | 58 |
| மன்னார் ... | வ. | 35,007 | 2,009 | 29,063 | 1,696 | 1,624 | 94 |
| அநுராதபுரம் ... | வ | 118,850 | 25,665 | 89,870 | 20,583 | 4,700 | 880 |
| பொலநறுவை ... | வ | 62,616 | 43,557 | 52,939 | 36,679 | 4,106 | 2,161 |
| திருகோணமலை ... | வ. | 37,556 | 6,131 | 29,282 | 4,951 | 1,413 | 272 |
| மட்டக்களப்பு .. | வ. | 82,655 | 20,977 | 59,740 | 15,085 | 2,046 | 695 |
| அம்பாறை ... | வ. | 94,351 | 51,759 | 74,835 | 43,081 | 3,215 | 1,946 |
| அம்பாந்தோட்டை ... | வ. | 46,543 | 25,611 | 38,068 | 20,165 | 2,029 | 1,010 |
| இலங்கை ... | | 1,178,969 | 613,133 | 922,355 | 488,451 | 42,004 | 20,896 |

** ஈ. = ஈர வலயம்; வ. = வரண்ட வலயம்.

* 1972/73 பெரும் போகத்தையும் (செத்தெம்பர்/ஒற்றோபர் – மாச்சு/ஏப்பிரல்) 1973 சிறு போகத்தையும் (ஏப்பிரல்/மே – ஓகத்து செத்தெம்பர்) பயிர் செய் ஆண்டு உள்ளடக்குகிறது.

† தற்நாலிக மதிப்பீடுகள்.

அட்டவணை II (ஆ) 1

## 1972/73 ஆம் பயிரிடும் ஆண்டு*— நெல் உப பிரிவு†

| ஒரு ஏக்கரின் விளைச்சல் (புசல்கள்) | | திருத்திய பயிர்கள் பயிரிடப்பட்ட எல்லைப் பரப்பு | | வழங்கப்பட்ட உரம் (தொன்கள்) | | உத்தரவாத கொள்வனவுத் திட்டம் கொள்வனவுகள் (புசல்கள் '000) | |
|---|---|---|---|---|---|---|---|
| பெரும் போகம் 1972/73 | சிறு போகம் 1973 | பெரும் போகம் 1972/73 | சிறு போகம் 1973 | பெரும் போகம் 1972/73 | சிறு போகம் 1973 | பெரும் போகம் 1972/73 | சிறு போகம் 1973 |
| 35.55 | 37.62 | 35,098 | 31,762 | 1,603.8 | 1,014.8 | 22 | 3 |
| 29.62 | 29.67 | 11,023 | 9,508 | 1,009.9 | 1,078.9 | 85 | 6 |
| 23.82 | 26.47 | 15,904 | 18,850 | 875.6 | 1,916.8 | 99 | 25 |
| 30.82 | 35.72 | 30,451 | 23,042 | 921.2 | 990.7 | 121 | 119 |
| 35.65 | 34.42 | 21,011 | 8,632 | 331.9 | 157.8 | 238 | 18 |
| 40.90 | 41.22 | 92,367 | 70,936 | 3,097.7 | 2,337.5 | 1,512 | 93 |
| 42.08 | 48.40 | 19,954 | 17,110 | 740.0 | 552.6 | 111 | 11 |
| 40.67 | 40.72 | 15,754 | 13,965 | 563.7 | 1,388.8 | 582 | 238 |
| 66.52 | 53.12 | 41,456 | 20,519 | 1,548.9 | 992.0 | 761 | 314 |
| 50.20 | 42.47 | 20,007 | 8,816 | 542.8 | 364.5 | 547 | 73 |
| 62.48 | 68.40 | 13,457 | 7,667 | 141.3 | 85.6 | 113 | 5 |
| 61.10 | 58.02 | 29,749 | 7,962 | 559.2 | 170.1 | 447 | 109 |
| 61.15 | 52.20 | 17,007 | 2,154 | 263.1 | 75.6 | 448 | 64 |
| 36.12 | 41.67 | 50,642 | 9,332 | 2,586.6 | 1,716.7 | 857 | 3 |
| 42.25 | 47.92 | 44,381 | 1,596 | 755.7 | 175.1 | 1,063 | 3 |
| 55.85 | 55.67 | 42,117 | 1,824 | 875.3 | 179.9 | 832 | 10 |
| 52.30 | 41.27 | 75,531 | 16,550 | 711.6 | 326.8 | 2,422 | 346 |
| 77.57 | 58.92 | 54,087 | 32,281 | 2,020.2 | 748.4 | 3,383 | 1,128 |
| 48.25 | 54.97 | 37,713 | 4,413 | 734.0 | 128.9 | 1,118 | 139 |
| 34.25 | 46.05 | 77,351 | 12,754 | 2,084.5 | 733.7 | 725 | 46 |
| 42.95 | 45.17 | 80,974 | 42,454 | 608.5 | 1,758.1 | 2,084 | 792 |
| 53.30 | 50.07 | 40,486 | 19,642 | 724.9 | 583.1 | 1,125 | 403 |
| 45.54 | 42.78 | 866.520 | 381,769 | 23,300.4 | 17,476.4 | 18,695 | 3,948 |

மூலங்கள்: குடித்தொகை புள்ளிவிபரத் திணைக்களமும்,
வேளாண்மை காணி அமைச்சும்.

வகையான் உணவுப்பயிர்களைப் பயிரிடவேண்டும். இத்தகைய சட்டங்களானது ஒவ்வொரு நிலச்சொந்தக்காரர் அல்லது நிலத்தில் வதிவோரை, பயிரிடப்படாத நிலங்களில் நெல், மரவள்ளி, வத்தாளங் கிழங்கு, கிழங்கு வகைகள் போன்ற வற்றை பயிரிடுமாறு பணித்துள்ளதுடன், பயிரிடாவிடின் இந்நிலம் பறிமுதலாகும் என எச்சரிப்பதோடு பயிரிடப்படாத காணிகளைப் பயிரிட விரும்பிப் பொறுப்பேற்போருக்கு மாற்றுவதற்கும் இடங்கொடுக்கின்றது. மேலும், சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் நிலங்களை அச்சொந்தக்காரருக்கு அல்லது வதிவோருக்குத் திரும்பக் கொடுக்கவும், புதிய பயிரிடுவோரினால் நியாயமான நில வாடகையை முந்திய சொந்தக்காரருக்கு அல்லது அதில் வதிவற்றோருக்குச் செலுத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. உணவு உற்பத்தித் திட்டத்தினை ஒழுங்குசெய்வதற்கும், ஒருங்கிணைப்பதற்கும், பொதுமக்கள் ஆதரவினைத் திரட்டுவதற்குமாக, தேசிய அரசப்பேரவை அங்கத்தவர்களைக்கொண்ட குழுவிற்கு ஒரு மாவட்ட அரசியல் அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்,

(ii) **சாதனைகள்**

(அ) நெல் உபபிரிவு ;

*1972/73*இற்கான பெரும்போக, *1972*ஆம் ஆண்டிற்கான சிறுபோக காலப் பகுதியில் நெல் என்ற உட்பிரிவில் ஏற்பட்ட சாதனைகள் பற்றிய தரவுகள் அட்டவணை *11* (ஆ) இல் தரப்பட்டுள்ளன.

பெரும்போகம் *1972/73* :

*1972/73*ஆம் ஆண்டிற்கான பெரும்போக காலப்பகுதியில் விதைக்கப்பட்ட ஏக்கர்கள் 12 இலட்சமாகும், அல்லது கிட்டத்தட்ட முந்திய 5 பெரும்போக காலப்பகுதியில் விதைக்கப்பட்ட அளவினைக் கொண்டதாகும். ஆனல், *1971/72* ஆம் ஆண்டு பெரும்போக காலப்பகுதியில் விதைக்கப்பட்ட அளவிலும் *0.9* சதவீதம் குறைவானதாகும். இக்காலப்பகுதியில் அறுவடைசெய்யப்பட்ட தேறிய ஏக்கர்கள் *4.8* சத வீதம்தான் முன்னைய பெரும்போக காலப்பகுதியில் அறுவடை செய்யப்பட்ட பரப்பிலும் அதிகரித்துக் காணப்பட்டது. *1972/73* பெரும்போக காலப்பகுதியில் அறுவடைசெய்யப்படாத பரப்பு, விதைக்கப்பட்ட மொத்த எல்லைப்பரப்பில் *8.0* சதவீதமாகும். இது முன்னைய பெரும்போகத்தின் தொடர்பான எண்தொகையான *12.7* சதவீதத்திலும் பார்க்க குறிப்பிடத்தக்களவு குறைந்ததாக விளங்குகிறது. ஆனல் முன்னைய ஐந்து பெரும்போகங்களிலும் அறுவடை செய்யப்படாத சராசரி அளவிற்கு கிட்டத்தட்ட சமமானதாகும்.

முன்னைய பெரும்போகத்திலும்பார்க்க, *1972/73* பெரும்போகத்தில் அறுவடை செய்யப்பட்ட பரப்பளவில் *4.8* சதவீதங்கொண்ட அதிகரிப்பு ஏற்பட்டபோதும் இவ்விளைச்சலை, முன்னைய பெரும்போகத்தினதுடன் ஒப்பிடும்போது மொத்த உற்பத்திக்குச் சமமான அதிகரிப்பிலும் (*0.4* சதவீதம்) சிறு வீழ்ச்சி ஏற்பட்ட காரணத்தால் இவ்விளைச்சலில் ஒரு வீழ்ச்சி ஏற்பட்டது. *1972/73*இன் பெரும்போகத்தின் விளைச்சல், ஏக்கருக்கு *45.5* புசல் ஆக

*1971/72 பெரும்போகத்தின் 48.1 புசலிலும்பார்க்க 5.4 சதவீதம் குறைந்ததாக விளங்கியது. பாதகமான காலநிலைகளே முக்கியமாக இவ் விளைச்சலின் வீழ்ச்சிக்குப் பங்களித்தனவெனலாம். அத்துடன் உர வளங்கலில்* ஏற்பட்ட குறிப்பிடமுடியாத 0.2 சதவீதம் கொண்ட அதிகரிப்பும் ஓரளவு காரணமாகும்.*

*1973 சிறுபோகம்*

*1973, சிறுபோக காலப்பகுதியில் பயிரிடப்பட்ட பரப்பளவு 6 இலட்சமாக அமைந்து முன்னைய பெரும்போகத்தின் அளவில் கிட்டத்தட்ட அரைப் பங்கினதாயும், முன்னைய (1972) சிறுபோகத்தில் பயிரிடப்பட்ட பரப்பளவிலும்பார்க்க 0.8 சதவீதம் அதிகரித்ததாகவும் விளங்கியது. 1973 சிறுபோகத்தில் பயிரிடப்பட்ட பரப்பளவு முன்னைய ஐந்து சிறுபோகங்களிலும் பயிரிடப்பட்ட சராசரி பரப்பளவிலிருந்து குறிப்பிடத்தக்களவு வேறுபட்டிருக்கவில்லை. 1973, சிறுபோகத்தில் அறுவடைசெய்யப்பட்ட தேறிய பரப்பு முன்னைய போகத்திலும் பார்க்க 5.7 சதவீதத்தாலும், 1968-72 காலப்பகுதியில் அறுவடைசெய்யப்பட்ட பரப்பளவிலும் பார்க்க 0.9 சதவீதத்தாலும் அதிகரித்தது. 1973இல் அறுவடைசெய்யப்படாத பரப்பு, விதைக்கப்பட்ட பரப்பெல்லையில் 6.3 சதவீதமாகும். இந்த வீழ்ச்சி 1972இன் 10.7 சதவீதம்கொண்ட வீழ்ச்சியிலும் பார்க்கக் குறைவுற்றிருந்தது. ஆனால் 1968-72 ஆகிய ஐந்து வருட காலப்பகுதியின் சராசரிக் குறைவீழ்ச்சிக்குக் கிட்டத்தட்ட சமமானதாக விளங்கியது.*

*1973, சிறுபோகத்தில் அறுவடைசெய்யப்பட்ட பரப்பின் 5.7 சதவீதம் கொண்ட அதிகரிப்பு, உற்பத்தியின் அதிகரிப்புக்கு ஈடுகொடுக்கும் முறையில் அமையவில்லை. (உற்பத்தி 1.6 சதவீதம் மட்டுமே அதிகரித்தது.) அத்துடன் விளைச்சல் 1972இன் ஏக்கருக்கான 44.5 புசலிலிருந்து ஏக்கரொன்றுக்கு 42.8 புசலாக 4 சதவீதத்தால் 1973இல் வீழ்ச்சியுற்றது. 1973இன் உரவழங்கல்** 45.0சதவீதத்தாலும், மேம்படுத்தப்பட்ட பயிர் வகைகளை உள்ளடக்கிய எல்லைப் பரப்பு 0.5 சதவீதத்தாலும் அதிகரித்தது எனத் தரவுகள் காட்டியபோதும், விளைச்சலின் வீழ்ச்சி முக்கியமாக நிறுவன ரீதியான காரணிகளால் ஏற்பட்டதெனக் கொள்ளலாம்.*

*உற்பத்தியாண்டு 1972/73*

*1972/73 உற்பத்தியாண்டினை முழுமையாக எடுப்பின், 1972/73இற்கான 152.0 கொண்ட பயிர்ச்செய்கைக் குறிகாட்டி*** இவ்வாண்டுக் காலப்பகுதியில்*

---

* நெல்லைப் பயிரிடுவதற்கு பயன்படுத்தப்பட்ட உரத்தின் உண்மை அளவைத் தராது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களால் வழங்கப்பட்ட உரத்தின் அளவையே இத்தரவு குறிப்பதனால் விளைச்சலில் ஏற்பட்ட மாற்றங்களை விளக்குவதற்கு இத்தரவு போதியதாக அமையவில்லை.

** சிறுபோகத்தில் பயிரிடப்பட்ட அளவைப் பெரும்போகத்தில் பயிரிடப்பட்ட பரப்பளவின் சதவீதத்தில் எடுத்து அதன் முடிவை 100 உடன் கூட்டுவதினால் பயிர்ச்செயகைக் குறிகாட்டி கணிக்கப்படுகின்றது.

*** முன்னர் குறிப்பிட்ட அதே காரணிகள் விளைச்சலை விளக்கும் இப்புள்ளிவிபரத்தின் ஏற்புடைத் தன்மையைக் கட்டுப்படுத்துகின்றன.

பயன்படுத்தப்பட்ட காணியின் அளவு, ஐந்தாண்டுகொண்ட 1967-68 — 1971-72இன் 152.3 கொண்ட சராசரி பயிர்ச்செய்கைக் குறிகாட்டியுடன் ஒப்பிடும்போது அடிப்படையில் மாற்றங்களின்றித் தொடர்ந்திருந்தது என்பதைக் குறிக்கின்றது. ஆயின் முன்னைய உற்பத்தியாண்டிற்கான 151 3 கொண்ட எண்தொகைக்கு மேலாகச் சற்று அதிகரித்துள்ளது. 1972/73 உற்பத்தியாண்டின் மொத்த நெல் உற்பத்தி 62.9 புசல்களாகும். இவ்வாண்டில் உற்பத்தி முன்னைய ஆண்டுக்கான தொடர்பான எண்தொகையிலும் குறிப்பிடத்தக்களவு வேறுபடவில்லை. 1972/73 உற்பத்தியாண்டின் சராசரி விளைச்சல், முன்னைய ஆண்டின் ஏக்கரொன்றிற்கு 46.3 புசல்களிற்கு மாருக 44.2 புசல்களாகக் காணப்பட்டது.

இது, விளைச்சலின் 4.6 சதவீதம்கொண்ட வீழ்ச்சியைப் பிரதிபலிக்கிறது. 1972/73 உற்பத்தியாண்டில் அறுவடைசெய்யப்பட்ட மொத்தப் பரப்பளவில் 38.4 சதவீதம் ஈரவலயத்திலும் 61.6 சதவீதம் வரண்ட வலயத்திலும் காணப்பட்டிருக்கையில், மொத்த உற்பத்தியில், ஈரவலயத்திலிருந்து 35.1 சதவீதமும், உலர் வலயத்திலிருந்து 64.1 சதவீதமும் பெறப்பட்டது. ஈரவலயத்தில் பெற்ற ஏக்கரொன்றுக்கு 40.8 புசல்களுக்கு மாருக, உலர் வலயத்தில் ஏக்கரொன்றுக்கு 44.0 புசல் கொண்ட அதிகரித்த விளைச்சல் காணப்பட்டது. அதிகரித்த உரம் வழங்கப்பட்டமைக்கு ஏற்பவும் மொத்த வழங்கலில் 60.4 சதவீதம் மேம்பட்ட வகைப்பயிர்கள் கூடிய எல்லைப்பரப்பில் (மொத்த எல்லைப் பரப்பில் 70.9 சதவீதம்) பயிரிடப்பட்டமைக்கு ஏற்பவும் வரண்ட வலயத்தில் விளைச்சலின் அதிகரிப்பு விளங்கியது.

பெரும்போகம் 1973/74

1973/74 இலிருந்து 1973, திசெம்பர் வரையிலான பெரும்போகப் பகுதியில் பயிரிடப்பட்ட 1,080,125 பரப்புகள் கொண்ட மொத்தப் பரப்பளவில் 81.1 சதவீதம் மேம்பட்ட வகைப் பயிர்களைப் பயிரிடுவதற்குப் பயன்படுத்தப்பட்டது. முந்தியஆண்டின் தொடர்பான காலப்பகுதியில் பயிரிடப்பட்ட அளவிற்கு மேலாக 1973/74 பெரும்போகத்தில் பயிரிடப்பட்ட பரப்பளவை 4.2 சதவீதம்கொண்ட அதிகரிப்பைக் காட்டுகிறது. 1973, திசெம்பர் 31 வரை மேம்பட்ட விதை வகைகளைப் பயிரிட்ட பரப்பைச் சென்ற பெரும் போகத்தின் தொடர்பான காலப்பகுயில் மேம்பட்ட விதை வகைகளைப் பயிரிட்ட பரப்புகளுடன் ஒப்பிடுகையில் 14.0 சதவீதம்கொண்ட ஒரு அதிகரிப்பினைக் காட்டுகின்றது.

உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழான கொள்வனவுகள் (உ. வி. தி.)

1971/72 பெரும் போகத்தின் உத்தரவாத விலைத்திட்டத்தின்கீழ் செய்யப்பட்ட கொள்வனவுகள் மொத்த நெல் உற்பத்தியின் 45.0 சதவீதமாக

விளங்கும்போது, 1972/73 பெரும்போகத்தில் இத்திட்டத்தின்கீழ் செய்யப்பட்ட நெல் கொள்வனவுகள் 44.5 சதவீதமாக விளங்கின. 1972/73 பெரும் போகத்தில் கொள்வனவுசெய்யப்பட்ட அளவு 187 இலட்சம் புசல்களாகும். முன்னைய பெரும் போகத்தின்போது, அது 190 இலட்சம் புசல்களாக விளங்கியது. 1972/73 இல் செய்யப்பட்ட உ. வி. திட்டத்தின் கொள்வனவுகளில் 87.5 சதவீதம் உலர்வலயத்திலிருந்து செய்யப்பட்டது.

மொத்த உற்பத்தியில் சிறுபோகத்தின் உ. வி. திட்ட கொள்வனவுகள் 1972இன் 72 இலட்சம் புசல்கள் அல்லது 34.8 சதவீதத்திற்குமாருக 40 இலட்சம் புசல்கள் அல்லது 18.9 சதவீதமாக அமைந்தன. 1972இன் சிறுபோகத்தில் செய்யப்பட்ட உ. வி. தி. கொள்வனவுகளில், 79.0 சதவீதம் உலர் வலயத்திலிருந்து செய்யப்பட்டது.

1972/73 உற்பத்தியாண்டில் செய்யப்பட்ட உ. வி. தி. கொள்வனவுகள் மொத்த உற்பத்தியில் 36.0 சதவீதமாகும். முந்திய உற்பத்தியாண்டில் அது 41.6 சதவீதமாக விளங்கியது. முழுமையான நியதிகளின்படி 1971/72 உற்பத்தியாண்டில் கொள்வனவுசெய்யப்பட்ட 262 இலட்சம் புசல்களுக்கு மாருக 1972/73 உற்பத்தியாண்டில் 226 இலட்சம் புசல்கள் கொள்வனவுசெய்யப்பட்டதால் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் அளவில் 13.5 சதவீதம்கொண்ட வீழ்ச்சி ஏற்பட்டது.

உ. வி. திட்டத்தின்கீழ் கொள்வனவில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு உத்தரவாத விலைக்கும் சந்தைவிலைக்கும் இடையில் நிலவிய அதிகரித்த வேறுபாடே காரணமாகும்.

(ஆ) உப-உணவுப் பயிர் உட்துறை

1971/72, 1972/73 உற்பத்தியாண்டுகளுக்கான, உப-உணவுப் பயிர்களின் உப-துறையின் நடவடிக்கையின் தரவு அட்டவணை 11 (ஆ) 2இற் தரப்பட்டுள்ளது.

1972/73 உற்பத்தியாண்டில், அட்டவணையின் முதல் ஒன்பது பயிர்களின் கீழுள்ள பரப்பளவு (இரண்டிற்கான நிறைவுபெற்ற தரவுகள் கிடைக்கக்கூடியதாயிருக்கின்றன), முன்னைய ஆண்டிலும் மேலாக 68.5 சதவீதத்தால் அதிகரித்தது. 1972/73இல் மரவள்ளி, சோளம், மிளகாய், குரக்கன் ஆகியன பயிரிடப்பட்ட பரப்பளவு, (சோயா அவரை, உருளைக் கிழங்குகள்* தவிர்த்து) அட்டவணையில் வரிசைப்படுத்தப்பட்ட பயிர்களின் கீழுள்ள பயிரிடப்பட்ட மொத்தப் பரப்பளவில் 86.7 சதவீதமாகும். மரவள்ளி,

---

* இவ்விரண்டு பயிர்களும் கிடைத்த தரவின் நிறைவுறுத்தன்மையின் காரணத்தால் உள்ளடக்கப்படவில்லை.

# அட்டவணை II (ஆ) 2

## 1971/72, 1972/73ஆம் பயிர்செய் ஆண்டுகளில் உப உணவுப்பயிர்த் துணைப்பிரிவின்(அ) சாதனை

| உப உணவுப் பயிர் | பயிரிடப்பட்ட அளவு (ஏக்கர்கள்) | | உற்பத்தி (அந்தர்) | | ஒரு ஏக்கரில் விளைச்சல் (அந்தர்) | |
|---|---|---|---|---|---|---|
| | 1971/72 | 1972/73 | 1971/72 | 1972/73 | 1971/72 | 1972/73 |
| 1. மரவள்ளி ... | 146,181 | 191,785 | 6,251,436 | 6,541,411 | 42.76 | 34.11 |
| 2. சோளம் ... | 40,142 | 142,800 | 261,276 | 863,930 | 6.51 | 6.04 |
| 3. மிளகாய் ... | 59,773 | 90,903 | 238,048 | 382,427 | 3.98 | 4.20 |
| 4. வெங்காயம் ... | 14,253 | 17,288 | 1,222,965 | 1,332,945 | 85.80 | 77.10 |
| 5. கச்சான் ... | 11.950 | 15,352 | 107,757 | 141,882 | 9.01 | 9.24 |
| 6. பச்சைக் கச்சான் ... | 7,053 | 12,966 | 24,571 | 58,411 | 3.48 | 4.50 |
| 7. அன்னாசி ... | 4,249 | 4,943 | 879,200 | 1,728,160 | 206.91 | 349.61 |
| 8. சோகம் ... | 196 | 2,982 | 624 | 22,160 | 3.18 | 7.43 |
| 9. பாசன் பழம் ... | 1,683 | 1,942 | 168,300 | வி. கி. | 100.0 | வி.கி. |
| 10. சோயா அவரை ... | 439* | 304* | 3.174* | 3,829* | 7.23 | 12.59 |
| 11. உருளைக் கிழங்கு ... | 7,809 | 4,698* | 922,600 | 531,520** | 118.14 | 113.86 |
| 12. பம்பாய் வெங்காயம் | 603* | 500* | 34,536* | 26,543 | 57.27 | 53.08 |
| 13. குரக்கன் ... | வி. கி. | 53,944 | வி. கி. | 288,986 | வி. கி. | 5.35 |
| 14. எள்ளு ... | வி. கி. | 15,609 | வி. கி. | 49,316 | வி. கி. | 3.15 |
| 15. மினேரி ... | வி. கி. | 1,101 | வி. கி. | 3,932 | வி. கி. | 3.57 |
| 16. கொள்ளு ... | வி. கி. | 563 | வி. கி. | 1,955 | வி. கி. | 3.47 |
| 17. அரிசி .. | வி. கி. | 178 | வி. கி. | 636 | வி. கி. | 3.57 |
| 18. கறுப்புக் கச்சான் ... | வி. கி. | 112 | வி. கி. | 998 | வி. கி. | 8.91 |
| 19. பருப்பு .. | வி. கி. | 71 | வி. கி. | 987 | வி. கி. | 13,90 |

மூலம்: வேளாண்மை காணி அமைச்சும், குடித்தொகை புள்ளிவிவரத் திணைக்களமும்.

(அ) தற்காலிக மதிப்பீடு

(ஆ) அட்டவணை II (ஆ) 1 அடிக்குறிப்பு (அ)வில் பயிரிடும் ஆண்டு என்பது வரையறைசெய்யப்பட்டுள்ளது.

* சிறுபோகம் மட்டும் ** பெரும்போகம் மட்டும் வி. கி. — விபரம் கிடைக்கவில்லை.

சோளம், வெங்காயத்தைப் பொறுத்தவரை, *1972/73* உற்பத்தியை முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது இவற்றின் அதிகரிப்பு சிறியளவாக விளங்கியமைக்குப் பின்வருபவை காரணமாக அமையலாம்.

(அ) பண்படுத்தப்படாத புதிய காணிகள் பயிர்ச்செய்கைக்குக் கொண்டு வரப்பட்டமை.

(ஆ) முதற் தடவையாக பயிரிடுபவர்களுக்கு இப்புதிய பயிர்களின் பயிர்ச் செய்கையின் அடிப்படைத் தொழில் நுட்ப அறிவு போதாமை.

(இ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது காணப்படும் மிகப்பாதகமான காலநிலைகள்.

**2. கிராமிய வங்கித் தொழிலும் கொடுகடனும்**

*1973* ஆம் ஆண்டில் கிராமியத் துறைக்குரிய நிறுவனக் கொடுகடனானது, முதல் நிலையில் வேளாண்மைக் கொடுகடன் திட்டம், கூட்டுறவுக் கிராமிய வங்கிகள், வேளாண்மைச் சேவை நிலையங்களிலுள்ள இலங்கை வங்கியின் உப-அலுவலகங்கள் என்பவற்றினூடாக வழங்கப்பட்டுள்ளது. கிராமியக் கொடுகடன் திட்டமெனக் கூறப்படும் யாவையுமடக்கிய திட்டமொன்று, *1973* பெரும்போக காலத்தில்* கொண்டுவரப்பட்டதுடன் அது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுடன் இணைக்கப்பட்டுள்ள கிராமிய வங்கிகளூடாக இயங்குவதாயமைந்துள்ளது. அத்திட்டத்தின் ஏற்பாடுகளில் சில தற்போதுள்ள புதிய விவசாயக் கொடுகடன் திட்டத்திற்கும், *1973/74* பெரும்போகக் கால இலங்கை வங்கித் திட்டத்திற்கும் ஏற்புடைத்தனவாகும். மூன்று திட்டங்களின்கீழும் இவ்வாண்டில் வழங்கப்பட்ட கடன்கள் ரூ. *1,386* இலட்சத்தைக் கொண்டனவாகும். இதற்கு மேலாக, கிராமியத் துறைக்குரிய கடன், குறிப்பிட்ட தேவைகளுக்காக அரசாங்கத் திணைக்களங்களாலும், வர்த்தக வங்கிகளாலும், சிறப்புக் கொடுகடன் நிறுவனங்களாலும் இயக்கப்பட்ட திட்டங்களினால் அளிக்கப்பட்டது.

மேற்கூறப்பட்டுள்ள திட்டத்திற் தரப்பட்டுள்ள குறிக்கப்பட்ட பயிர்களுக்கான பயிர்ச்செய்கைக் கடன்களின் தவறுகையிலுள்ள தொகைகளின் 75 சதவீதமளவிற்கு அரசாங்கத்தின் சார்பில் மத்திய வங்கியானது உத்தரவாதமளிக்கின்றது.

**யாவையுமடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் ஏற்பாடுகள்**

யாவையுமடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டமானது கிராமியத்துறையின் சகல கொடுகடன் தேவைகளையும் திரட்டப்பட்ட முறையில் நிறைவேற்றுவதற்கென வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் புகுத்தப்பட்ட சிறப்பான மாற்றங்கள் பின்வருமாறு:-

---

* பயிர்ச்செய்கையாண்டு பெரும்போகம், சிறுபோகம் என்ற இரு போகங்களைக் கொண்டுள்ளது. பெரும்போகம் செத்தெம்பர்/ஒற்றோபர் தொடக்கம் மாச்சு/ஏப்பிரல் வரையும், சிறுபோகம் ஏப்பிரல்/மே தொடக்கம் ஓகத்து/செத்தெம்பர் வரையுமாகும்.

1. இவ்வசதிகள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கூட்டுறவு கிராமிய வங்கிகளூடாக, அத்தகைய வங்கிகள் தாபிக்கப்பட்டுள்ளவிடங்களில் வழிப்படுத்தப்பட்டன. இத்தகைய கிராமிய வங்கிகள் தாபிக்கப் படாத, அல்லது அவை முற்றுன கிராமியக் கொடுகடன் திட்டத் தைச் செயற்படுத்தத் தொடங்காத சந்தர்ப்பங்களில், மக்கள் வங்கி கடந்த காலங்கள் போலவே பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களி னூடாகப் பயிர்ச்செய்கைக் கடன்களை நேரடியாக அளிக்கின்றது. எனினும், பல்வேறு பயிர்ச்செய்கைகளுக்கான கடன்களின் அளவை நிர்ணயிக்கும் செயலில், மக்கள் வங்கி முற்றுன கிராமியக் கொடுகடன் திட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட கடன் வரையறையினுல் வழிப் படுத்தப்படுகின்றது.

2. கிராமிய வங்கிகள் இயங்குமிடங்களில் உற்பத்தி, நுகர்வு, வீடமைப்பு, கடன்மீட்பு, அவசர தேவைகள் போன்றவற்றிற்குக் கொடுகடன், முழு ஆண்டு அடிப்படையில் அளிக்கப்படும். கிராமிய சேமிப்பு களுக்கும் கிராமியக் கொடுகடனுக்குமிடையிலான முழுமையான இணைப்புகள் விவசாய விற்பனை வருவாய்கள், ஏனைய கிராமிய நிதி கள் என்பவற்றின் ஒன்றிணைப்பினுல் அனுகூலமாக்கப்பட்டது.

3. திட்டத்தின் கீழான கொடுகடன் வரையறைகள், தேவையையும் எல்லைப் பரப்பையும் பொறுத்ததாகும். கிராமிய வங்கிகள் இயங்கு மிடத்து, கொடுகடன் அளித்தல், கடன்களின் இறுதிப்பயன் படுத் தலின் மேற்பார்வை என்பவற்றையொட்டிய தீர்மானங்கள் பன்முகப்படுத்தப்பட்டுள்ளன. விவசாயக்கடனென்றின் வருவாய்களை உரம், விவசாய-இரசாயனங்கள் என்பவற்றிற்கென குறிப்பிடப்பட்ட தொகை தவிர்ந்த ஏனைய இயக்கங்களிடையே ஒதுக்கீடு செய்தல், ஊர்ச் சுற்றுடலின் தேவைகளைக் கருத்திலெடுத்து மாற்றப்படலாம். நிதி அளவிற்கு ஏற்புடைய கொடுகடன் வரையறைகள் பின்னிணைப்பி லுள்ள அட்டவணைகள் 1—7இல் தரப்பட்டுள்ளன.

இத்திட்டத்தில் சில முக்கிய சீராக்கங்கள் பின்வருமாறு:

1. குறிப்பிட்ட பிரதேசங்கள், பல்வகையான விதைகள், பயிர்கள் என்ப வற்றுக்குத்தோதாகக் கடன்உச்சவரம்பினை அமைப்பது,வெவ்வேறு உற் பத்தித்தேவைகளுக்கு ஏற்ப கடன்களை வழிப்படுத்த உதவுவதுடன் பொருள் வளங்களின் சிக்கனமான ஒதுக்கீட்டை அதிகரிக்கவும் துணை நிற்கிறது.

2. புதிய விவசாயக்கொடுகடன் திட்டத்தின் வெற்றியின்மைக்குக் கடன் களை அறவிடுவதற்கு நிதியீட்டும் நிலையங்களிற்குப் போதுமானளவு நேரடியான அதிகாரமில்லாதிருந்ததே முக்கிய காரணமாகும். மாறுக, கிராமிய வங்கிகள் இலங்கை வங்கி உப/அலுவலகங்கள் என்வற்றின் ஊடாகக் கிராமிய நிதிகளை ஒன்று திரட்டுவதற்கு யாவையுமடக்கிய ஒரு திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக இந்நிலையங்கள் தமது நிதிகளைக் கடனுகக் கொடுத்து, அவற்றை அறவீடுசெய்வதற் குரிய பொறுப்பினையும் ஏற்கும்.

சகலகொடுகடன் திட்டங்களும மரபுவழி வேளாண்மைத்துறையில் உயர்ந்த மட்ட உற்பத்தியினைப் பேணுவதன்பொருட்டு நாணயமற்ற கடன் காரர்களுக்குக் கடன் கொடுக்கும் இடர்ப்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டுள்ளன. தொடக்க நிலையிலேனும், இப்பிரச்சினையினுல் யாவையுமடக்கிய திட்டமும் பாதிக்கப்பட நேரிடும்.

**புதிய கொடுகடன் திட்டம்**

கிராமிய வங்கிகள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் திணைக்களங்களாகத்தாபிக்கப்படாதவிடங்களிலும், இவ்வங்கிகள் முற்ருன கிராமியக்கொடுகடன் திட்டத்தை இன்னமும் நடைமுறைப்படுத்தத் தொடங்காதவிடங்களிலும் 1967 இன் புதிய விவசாயக் கொடுகடன் திட்டம் இயங்கிவரும். அத்தகைய சந்தர்ப்பங்களில் யாவையுமடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தினுல் உயர்ந்த உச்சவரம்பு அங்கீகரிக்கப்பட்டு மக்கள் வங்கியினுல் விநியோகிக்கப்பட்ட கடன்களை வழிப்படுத்துவதற்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உதவியளிக்கும். நுகர்வுக் கடன்கள் தொடர்பான யாவையும, கிராமியக் கடன் திட்டத்தையும், சேமிப்பை ஒன்றுதிரட்டுதலையும் பற்றிய, ஏற்பாடானது கிராமிய வங்கிகள் செயற்படாதவிடங்களில் நடைமுறைப்படுத்தப்படமாட்டாது.

கிராமிய வங்கி, இலங்கை வங்கி உப-அலுவலகம் என்பவற்றின் பணி குறிப்பிடத்தக்களவு விரிவாக்கப்பட்டபோதும் புதிய கொடுகடன் திட்டமானது பயிர் செய்கைக் கடன்களின் முக்கியமான மூலமாகத் தொடர்ந்துமிருக்கின்றது, 1973ஆம் ஆண்டில் நெல், உப-பயிர்கள் என்பவற்றுக்கு வழங்கப்பட்ட ரூ. 1,024 இலட்சங்கொண்ட மொத்தத் தொகையில் ரூ. 978 இலட்சம் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டதாகும்.

**(அ) நெற்கடன்கள் :**

புதிய வியசாயக் கொடுகடன் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன்களின் தொகை, அறவிடும் முறையும் அளவும், பயிர் விளைவின்மையால் கடன்களைத் திருப்பிக்கொடுக்கும் காலத்தின் அளவு, தவறுகையின் அளவு என்பன அட்டவணை 11 (ஆ) 3 இல் தரப்பட்டுள்ளன.

புதிய விவசாயக் கொடுகடன் திட்டத்தின் மிக ஆரம்பகாலத்திலிருந்து தொடங்கிய கடன் பயன்பாட்டின் வீழ்ச்சிப்போக்கு, 1972/73 பெரும்போக காலத்திலும் தொடர்ந்ததுடன், முந்திய பெரும்போக காலத்தில் வழங்கப்பட்ட கடன்தொகையிலும் பார்க்க 15.4 சதவீதத்தினுல் குறைவுற்று வீழ்ச்சியுற்றது. 1973 சிறுபோக காலத்தில் கொடுகடன் பாவிப்பு முந்திய சிறுபோக காலத்தில் பாவிக்கப்பட்ட தொகையிலும்பார்க்க 17.9 சதவீதத்தினுல் அதிகரித்தது. 1972/73 பயிர்ச்செய்கை ஆண்டிற்கான கொடுகடன் பாவிப்பு (1972/73 பெரும்போகத்திற்கும், 1973 சிறுபோகத்திற்கும்) 1967/68 பயிர்ச்செய்கை ஆண்டில் திட்டம் தொடங்கப்பட்டபோது பாவிக்கப்பட்ட ரூ 727 இலட்சத்திலும்பார்க்க ரூ. 195 இலட்சம் அல்லது 62.2 சதவீதம் குறைவாக இருந்தது. இவ் வீழ்ச்சிக்குத் தவறுகைகளின் அதிகரிப்பே காரணமாக அமையும். இத்தவறுகை

## புதிய வேளாண்மைக் கொடுகடன்

| விடயம் | தொகை பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பெரும் போகம் | சிறு போகம் | பெரும் போகம் | சிறு போகம் | பெரும் போகம் | சிறு போகம் | பெரும் போகம் | சிறு போகம் | பெரும் போகம் | சிறு போகம் | பெரும் போகம் |
| | 67/68 | 1968 | 68/69 | 1969 | 69/70 | 1970 | 70/71 | 1971 | 71/72 | 1972 | 72/73 (அ) |
| வழங்கப்பட்ட கடன்கள் ... | 61.4 | 11.3 | 45.8 | 9.9 | 39.3 | 12.3 | 23.5 | 5.8 | 24.0 | 6.7 | 20.3 |
| மொத்த மீளக்கொடுப் பனவுகள், ... அவற்றில் | 52.5 | 9. | 27.9 | 8.0 | 19.9 | 8.4 | 12.1 | 4.8 | 13.8 | 4.8 | 11.5 |
| (அ) தன்விருப்பில் ... | 43.5 | 9.1 | 25.8 | 7.7 | 19.9 | 7.8 | 12.1 | 4.8 | 13.8 | 4.8 | 11.5 |
| (ஆ) அரிசிப்பங்கிடு ... | 9.0 | 0.5 | 2.1 | 0.3 | — | 0.6 | — | - | — | – | — |
| பயிர் விளையாமையால் நீடிக்கப்பட்டவை ... | 0.1 | — | 0.9 | 0.1 | 0.4 | — | — | — | — | — | — |
| வரத் தவறுதவை ஆனால் வரவேண்டியவை ... | — | — | — | — | — | — | — | — | — | 0.1 | 0.5 |
| வரத்தவறியதுவை ... | 8.8 | 1.7 | 17.0 | 1.8 | 19.0 | 3.9 | 11.4 | 1.0 | 10.2 | 1.8 | 8.3 |

(அ) தரவுகள் நிறைவு பெறுதவை.

அட்டவணை II (ஆ) 3

## திட்டம் — நெற்கடன்கள்

| | | வழங்கப்பட்ட தொகையின் சதவீதமாக | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சிறு போகம் | பெரும் போகம் | பெரும் போகம் | சிறு போகம் | பெரும் போகம் | சிறு போகம் | பெரும் போகம் | சிறு போகம் | பெரும் போகம் | சிறு போகம் | பெரும் போகம் | சிறு போகம் | பெரும் போகம் | சிறு போகம் | பெரும் போகம் |
| 1973 | 73/74 | 67/68 | 1968 | 68/69 | 1969 | 69/70 | 1970 | 70/71 | 1971 | 71/72 | 1972 | 72/73 | 1973 | 73/74 |
| 7.9 | 60.9 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |
| 2.9 | 0.4 | 85.6 | 84.9 | 60.9 | 80.8 | 50.6 | 68.3 | 51.5 | 82.8 | 57.5 | 71.6 | 56.6 | 36.7 | 0.7 |
| 2.9 | 0.4 | 70.8 | 80.5 | 56.3 | 77.8 | 50.6 | 63.4 | 51.5 | 82.8 | 57.5 | 71.6 | 56.6 | 36.7 | 0.7 |
| — | — | 14.6 | 4.4 | 4.6 | 3.0 | — | 4.9 | — | — | — | — | — | — | — |
| — | ... | 0.2 | — | 2.0 | 1.0 | 1.0 | — | — | — | — | — | — | — | — |
| 3.9 | 60.5 | — | — | — | — | — | — | — | — | — | 1.5 | 2.5 | 49.4 | 99.3 |
| 1.1 | — | 14.4 | 15.1 | 37.1 | 18.2 | 48.4 | 31.7 | 48.5 | 17.2 | 42.5 | 26.9 | 40.9 | 13.9 | — |

மூலம்: மக்கள் வங்கி.

அதிக எண்ணிக்கையான பயிர் செய்பவர்களைக் கொடுகடனளிக்கப்படுவதற்கு* உரிமையற்றோர்களாக்கியது. சாதகமற்ற கால நிலைகளும் 1972/73 பயிர்ச் செய்கைஆண்டில் கொடுகடன் பயன்பாட்டினைச் சுருக்குவதற்கு ஏதுவாயிருந்தன.

